## காஞ்சிபுரம் மாவட்டம்

## அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## 11 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 20 X 1 = 20

| | | |
|---|---|---|
| 1 | ஆ | காரியதரிசிகளின் கணக்கியல் |
| 2 | இ | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள் |
| 3 | இ | முன்னெச்சரிக்கை மரபு |
| 4 | இ / ஈ | இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல்<br>ஈ) முதல் = சொத்துக்கள் + பொறுப்புகள் |
| 5 | அ | குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் |
| 6 | ஆ | பற்று இருப்பு |
| 7 | ஆ | இருப்பாய்வு |
| 8 | ஆ | ஒரு குறிப்பிட்ட நாளில் |
| 9 | ஈ | உரிய குறிப்பேடு |
| 10 | இ | அ), ஆ) ஆகிய இரண்டும் |
| 11 | ஈ | வங்கிப்பத்தி வரவுப் பக்கம் |
| 12 | இ | வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல் |
| 13 | ஆ | முழுவிடு பிழை |
| 14 | ஆ | பேரேட்டில் எடுத்து எழுதும் போது தவறான கணக்கில் சரியான பக்கத்தில் பதிவு செய்தல் |
| 15 | ஆ | ஆண்டுதோறும் குறையும் |
| 16 | ஈ | முதலினச் செலவுகள் |
| 17 | ஈ | முதலினை |
| 18 | இ | அறைகலன் |
| 19 | ஈ | அடக்க விலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில் |
| 20 | ஆ | பெரிய, நடுத்தர வணிகம் |

### பகுதி - II

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

**21. கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.**

i) அளவிடுதல்

- வணிக நடவடிக்கைகள் குறித்து முறையான ஆவணங்களை வைத்திருத்தல், பதிவு செய்தல், எடுத்தெழுதுதல், கடைசியாக இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் ஆகியவையே கணக்கியலின் முதன்மையான பணியாகும்.



ii) முன்னறிதல்

- வணிக நிறுவனங்களின் எதிர்கால செயல் திறன் மற்றும் நிதிநிலை பற்றி கணக்கியலின் பல்வேறு கருவிகளின் மூலம் முன்கூட்டியே அறிந்து கொள்ளுதல்.

iii) ஒப்பிடுதல்

- கணக்கியல், நிகழ்ந்த செயல் திறனுடன், திட்டமிட்ட செயல் திறனை ஒப்பிட உதவுகிறது.

**22. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.**

- ஜே.ஆர். பேட்லிபாய் அவர்களின் கூற்றுப்படி, "கணக்கு ஏடுகள் பராமரிப்பு என்பது, வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்".

( அல்லது )

- ஆர்.என். கார்ட்டர் அவர்களின் கூற்றுப்படி, "கணக்கேடுகள் பராமரிப்பு என்பது , பணம் அல்லது பணத்தின் மதிப்பிலுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளையும் கணக்கேடுகளில் சரியாக பதிவு செய்யும் கலை மற்றும் அறிவியல் ஆகும்."

**23.**

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| a) | ₹.1,00,000 | = | ₹.80,000 | + | ₹. 20,000 |
| b) | ₹. 2,40,000 | = | ₹.1,60,000 | + | ₹. 80,000 |

**24. வரவு இருப்பு என்றால் என்ன?**

- பற்று பக்கத்தின் மொத்தத்தை விட, வரவு பக்கத்தின் மொத்தம் அதிகமாக இருப்பின் அந்த இருப்பு, வரவு இருப்பு எனப்படும்.

### ஜெயக்குமார் என்பரது ஏடுகளில் 31.12.2016 ஆம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியல்

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 7,130 |
| கூட்டுக: | | |
| வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது | | 800 |
| | | 7,930 |
| கழிக்க: | | |
| செலுத்திய காசோலை வசூலாகாதது | | 1,000 |
| வங்கி அறிக்கையின் படி இருப்பு | | 6,930 |

**26. பகுதி விடுபிழை என்றால் என்ன?**

- கணக்காளர் ஒரு நடவடிக்கையின் ஒரு பகுதியை மட்டும் பதிவு செய்யத் தவறினால், அது பகுதி விடு பிழையாகும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

27.

**தேய்மானத் தொகை காணல்**

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| நிலைச்சொத்தின் மதிப்பு | 50,000 |
| கழிக்க : முதல் ஆண்டு தேய்மானம் ( 50,000 x 15/100 ) | 7,500 |
| | 42,500 |
| கழிக்க : இரண்டாம் ஆண்டு தேய்மானம் ( 42,500 x 15/100 ) | 6,375 |
| சொத்தின் ஏட்டு மதிப்பு | 36,125 |

∴முதல் ஆண்டு தேய்மானம் ₹. 7,500

இரண்டாம் ஆண்டு தேய்மானம் ₹. 6,375

28. ப **சஞ்சயின் ஏடுகளில் 31, டிசம்பர் 2017 ம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 570 | விற்பனை | 26,200 | |
| கொள்முதல் | 15,800 | | கழிக்க : விற்பனை திருப்பம் | 60 | 26,140 |
| கழிக்க: கொள்முதல் திருப்பம் | 90 | 15,710 | இறுதி சரக்கிருப்பு | | 860 |
| மொத்த இலாபம் கீ/இ | | 10,720 | | | |
| | | 27,000 | | | 27,000 |

29. **மென்பொருள் என்றால் என்ன?**

- வன்பொருள் மற்றும் கணினி அமைப்பின் பயனாளிக்கும் இடையே இடைமுகமாக அமையும் நிரல்களின் தொகுப்பு மென்பொருள் எனக் குறிப்பிடப்படுகிறது.

30.

**சரிகட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2016 மார்ச் 31 | இறுதிச் சரக்கிருப்பு க/கு ப<br>வியாபார க/கு<br>( இறுதிச் சரக்கிருப்பு கணக்கில் கொண்டுவரப்பட்டது ) | | 10,000 | 10,000 |





**பகுதி - III**

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 3 = 21

31. **கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?**

(அ) முதலீட்டாளர்கள் (ஆ) அரசு

அ. **முதலீட்டாளர்கள்**

- ஒரு நிறுவனத்தில், தங்களது நிதியை முதலீடு செய்யும் ஆர்வமுள்ளவர்கள் முதலீட்டாளர்கள்
- தாங்கள் இடும் முதல், இலாபகரமாக தங்களது கைக்கு திரும்ப வரவேண்டும் என நினைப்பத்து முதலீட்டாளர்களின் இயல்பே.
- எனவே, நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளவும், எதிர்கால இலாபம் மற்றும் இடர் ஏற்கும் திறன் போன்றவற்றை தெரிந்து கொள்ளவும் அதிக ஆர்வம் கொண்டிருப்பர்.

ஆ. **அரசு**

- வணிக நிறுவனங்கள், நாட்டின் அரிதான வளங்களைப் பயன்படுத்துகின்றன.
- அரசாங்கம் , வணிக நிறுவனங்களின் செயல் திறனை அறிந்து வைத்திருந்தால் மட்டுமே, அரிதான வளங்களை ஒதுக்கீடு செய்தல், வணிகம் மற்றும் தொழில் துறைச் சார்ந்த கொள்கை முடிவுகளை உருவாக்குதல், மானியம் மற்றும் சலுகைகள் வழங்குதல் போன்றவற்றிற்கான முடிவுகளை எடுக்க முடியும்.
- மேற்கண்ட காரணத்தாலேயே, அரசு கணக்கியல் தகவல்களில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றது.

32. **'பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்' – விவரி.**

- பணமதிப்பீட்டுக் கருத்தின்படி, எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிடமுடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.
- பணமானது, பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால், பணத்தால் அளவிடக்கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.
- பணம் ஒரு பொதுவான அளவீடாக இருப்பதால், பலதரப்பட்ட வணிக விவரங்களை அதன் மூலம் பதிவு செய்ய முடிகிறது.

33. **இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.**

| | | |
|---|---|---|
| ஆள்சார் கணக்கு | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| சொத்து கணக்கு | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வதை வரவு செய்க |
| பெயரளவு கணக்கு | அனைத்துச் செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க |



www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

34. **ரொக்க கணக்கு**

| நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | 45,000 | | | | |

**சரக்கிருப்பு கணக்கு**

| நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | 55,000 | | | | |

**ரோஸ் முதல் கணக்கு**

| நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | 1,00,000 |

35. **சுபஸ்ரீ மின் பொருள் நிறுவனத்தின் ஏடுகளில்**

**கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே.ப.எண் | தொகை ( ₹ ) விளக்கம் | தொகை ( ₹ ) மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 5 | கார்த்திக் மின் பொருள் நிறுவனம் | | | | |
| | 10 மின் சலவைப் பெட்டிகள், ஒன்று ₹. 2,500 வீதம் ( 10 × ₹. 2,500 ) | | | 25,000 | |
| | 5 மின்சார அடுப்புகள், ஒன்று₹. 2,000 வீதம் ( 5 × ₹. 2,000 ) | | | 10,000 | 35,000 |
| 19 | கேதான் மின் பொருளகம் 3 மின்சார நீர்சூடேற்றி, ஒன்று ₹. 6,000 வீதம் ( 3 × ₹. 6,000 ) | | | | 18,000 |
| 25 | போலார் மின்பொருள் விற்பனையகம் 10 மின் விசிறிகள், ஒன்று ₹. 2,000 வீதம் ( 10 × ₹. 2,000 ) | | | | 20,000 |
| | கொள்முதல் க/கு ப | | | | 73,000 |



36.

ப **பாகுப்படுத்தப்பட்ட சி ல் லறை ரொக்க ஏடு** வ

| பெற்ற தொகை ₹. | ரொ.எ. ப.எண் | நாள் | விவரம் | சா.சீ. எண் | மொத்த செலவழித்த தொகை | அஞ்சல் செலவு | கூலி | பல்வகை செலவு | எழுது பொருள் | ஆள்சார் கணக்கு | பே.ப. எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2019 ஜூலை | | | | | | | | | |
| 2,000 | | 1 | ரொக்கம் | | | | | | | | |
| | | 10 | மடல் மற்றும் பதிவேடு | | 100 | | | | 100 | | |
| | | 15 | கூலி | | 300 | | 300 | | | | |
| | | 18 | தபால் செலவு | | 100 | 100 | | | | | |
| | | 23 | தேநீர் செலவுகள் | | 60 | | | 60 | | | |
| | | 25 | துரித அஞ்சல் செலவு | | 150 | 150 | | | | | |
| | | | | | 710 | 250 | 300 | 60 | 100 | | |
| | | 31 | இருப்பு கீ/இ | | 1,290 | | | | | | |
| 2,000 | | | | | 2,000 | | | | | | |
| | | ஆகஸ் | | | | | | | | | |
| 1,290 | | 1 | இருப்பு கீ/கொ | | | | | | | | |
| 710 | | 1 | ரொக்க க/கு | | | | | | | | |

37.

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) இரயில்வேத் துறைக்கு, இரயில் தண்டவாளம் அமைக்க செலுத்திய தொகை ₹. 50,000. | முதலினச் செலவு |
| (ii) பழைய அறைகலன் விற்றதில் ஏற்பட்ட நட்டம். | வருவாயின நட்டம் |
| (iii) சரக்கு விற்பனையின் பேரில் செலுத்திய ஏற்றிச்செல் கட்டணம். | வருவாயினச் செலவு |

38. கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களைக் குறிப்பிடுக.

1) <u>உள்ளீட்டு சாதனங்கள்</u>
   1. விசைப்பலகை ( KEY BOARD )
   2. ஒளியியல் வருடி ( SCANNNER )
   3. சுட்டி ( MOUSE )



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

4. இயக்குப்பிடி ( JOYSTICK )
5. தொடுதிரை ( TOUCH SCREEN )
6. எழுத்தாணி ( STYLUS )

2) <u>வெளியீட்டு சாதனங்கள்</u>
1. திரையகம் ( MONITUR )
2. அச்சுப்பொறி ( PRINTER )

39. <u>2019, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாப நட்ட கணக்கு</u>

ப          வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| வாராக்கடன் க/கு | 1,000 | | | | |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு | 2,450 | | | | |
| கடனாளிகள் மீதான தள்ளுபடிக/கு | 931 | | | | |
| | | 4,381 | | | |

<u>2019, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு</u>

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| | | | பற்பல கடனாளிகள் | 50,000 | |
| | | | <u>கழிக்க</u> : வாராக்கடன் | 1,000 | |
| | | | | 49,000 | |
| | | | <u>கழிக்க</u> : வாரா ஐயக்கடன் ஒதுக்கு 5% | 2,450 | |
| | | | | 46,550 | |
| | | | <u>கழிக்க</u> : கடனாளிகள் மீதான தள்ளுபடி 2% | 931 | 45,619 |

40. ---------------- <u>ஆம் நாளைய இலாப நட்ட கணக்கு</u>

ப          வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| | | பெற்ற தள்ளுபடி | 1,000 |

------------------ <u>ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு</u>

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | | | |





## பகுதி – IV

<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.</u> 7 × 5 = 35

41. அ) <u>கணக்கியல் சமன்பாடு</u>

| வ எண் | நடவடிக்கைகள் | சொத்துக்கள் ரொக்கம் ₹. | சரக்கிருப்பு ₹. | வங்கி | = | பொறுப்புகள் முதல் ₹. | கடனீந்தோர் ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| i) | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | + 80,000 | 0 | 0 | = | + 80,000 | 0 |
| | சமன்பாடு | +80,000 | 0 | 0 | = | + 80,000 | 0 |
| ii) | ரொக்க கொள்முதல் | -30,000 | + 30,000 | 0 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +50,000 | + 30,000 | 0 | = | + 80,000 | 0 |
| iii) | சம்பளம் ரொக்கமாக வழங்கியது | - 5,000 | 0 | 0 | = | - 5,000 | 0 |
| | சமன்பாடு | +45,000 | + 30,000 | | = | + 75,000 | 0 |
| iv) | பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்ட தொகை | 0 | + 5,000 | - 5,000 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +45,000 | + 35,000 | - 5,000 | = | + 75,000 | 0 |
| v) | கூடுதல் முதல் இட்டது | + 10,000 | 0 | | = | + 10,000 | 0 |
| | சமன்பாடு | +55,000 | + 35,000 | - 5,000 | = | + 85,000 | 0 |
| | சமன்பாடு | +85,000 | | | = | + 85,000 | |

( அல்லது )

41. ஆ) <u>பேரேட்டுக் கணக்குகள்</u>

<u>ரொக்க கணக்கு</u>

ப          வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2019ஜூன் 1 | ராஜா முதல் க/கு | | 50,000 | 2019 ஜூன்15 | கொள்முதல் க/கு | | 4,000 |
| 6 | விற்பனை க/கு | | 8,000 | 30 | இருப்பு கீ/ இ | | 54,000 |
| | | | 58,000 | | | | 58,000 |
| ஜூலை 1 | இருப்புகீ/கொ | | 54,000 | | | | |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**ப ராஜா முதல் கணக்கு வ**

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2019 ஜூன் 30 | இருப்பு கீ/இ | | 50,000 | 2019 ஜூன் 1 | ரொக்க க/கு | | 50,000 |
| | | | 50,000 | | | | 50,000 |
| | | | | ஜூலை 1 | இருப்பு கீ/ கொ | | 50,000 |

**ப விற்பனை கணக்கு வ**

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2019 ஜூன் 30 | இருப்பு கீ/இ | | 17,000 | 2019 ஜூன் 6 | ரொக்க க/கு | | 8,000 |
| | | | | 8 | தேவி க/கு | | 9,000 |
| | | | 17,000 | | | | 17,000 |
| | | | | ஜூலை 1 | இருப்பு கீ/ கொ | | 17,000 |

**ப தேவி கணக்கு வ**

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2019ஜூன் 8 | விற்பனை க/கு | | 9,000 | 2019 ஜூன் 30 | இருப்பு கீ/ இ | | 9,000 |
| | | | 9,000 | | | | 9,000 |
| ஜூலை 1 | இருப்பு கீ/கொ | | 9,000 | | | | |

**ப கொள்முதல் கணக்கு வ**

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2019 ஜூன்15 | ரொக்க க/கு | | 4,000 | 2019 ஜூன்30 | இருப்பு கீ/ இ | | 9,000 |
| 20 | சாந்தி க/கு | | 5,000 | | | | |
| | | | 9,000 | | | | 9,000 |
| ஜூலை 1 | இருப்பு கீ/கொ | | 9,000 | | | | |

**ப சாந்தி கணக்கு வ**

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2019ஜூன் 30 | இருப்பு கீ/இ | | 5,000 | 2019 ஜூன் 20 | ரொக்க க/கு | | 5,000 |
| | | | 5,000 | | | | 5,000 |
| | | | | ஜூலை 1 | இருப்பு கீ/ கொ | | 5,000 |

42. அ)

**பிருந்தாவின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2020 ஏப்ரல் 1 | ரொக்க க/கு ப<br>பிருந்தா முதல் க/கு<br>( பிருந்தா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 50,000 | 50,000 |
| 5 | கொள்முதல் க / கு ப<br>சுபாஷ் க / கு<br>( கடனுக்கு கொள்முதல் செய்தது ) | | 20,000 | 20,000 |
| 7 | இராமு க/கு ப<br>விற்பனை க/கு<br>( கடனுக்கு விற்பனை செய்தது ) | | 15,000 | 15,000 |
| 12 | சுபாஷ் க/கு ப<br>ரொக்க க/கு<br>பெற்றதள்ளுபடி க/கு<br>( கடனுக்கு கொள்முதல் செய்தது ) | | 20,000 | 19,500<br>500 |
| 15 | கூலி க/கு ப<br>மின்கட்டண க/கு ப<br>வியாபாரச் செலவுகள் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கம் வழங்கப்பட்டது ) | | 500<br>3,000<br>1,000 | 4,500 |

( அல்லது )


B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

42. ஆ)

**நாலந்தா புத்தகக் கடையின் ஏடுகளில்**

**கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | உ.வ.இ.எ | பே.ப.எ | தொகை ( ₹ ) விளக்கம் | தொகை ( ₹ ) மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2019 டிச 1 | **உமாதேவி**<br>100 வணிகப் புள்ளியியல் புத்தகங்கள், ஒன்று ₹. 80 வீதம் | | | 8,000 | |
| | 100 கணக்குப்பதிவியல் புத்தகங்கள், ஒன்று ₹. 150 வீதம் | | | 15,000 | 23,000 |
| 10 | **சுபா**<br>40 பொருளாதாரம் புத்தகங்கள், ஒன்று ₹. 80 வீதம் | | | 3,200 | |
| | கழிக்க : வியாபார தள்ளுபடி 15% | | | 480 | 2,720 |
| | **கொள்முதல் க/கு ப** | | | | 25,720 |

**விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | வெ.செ.இ.எ | பே.ப.எ | தொகை ( ₹ ) விளக்கம் | தொகை ( ₹ ) மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2019 டிச 7 | **ஸ்ரீதேவி**<br>240 வணிகப் புள்ளியியல் புத்தகங்கள், ஒன்று ₹. 90 வீதம் | | | 21,600 | |
| | 250 கணக்குப்பதிவியல் புத்தகங்கள், ஒன்று ₹. 170 வீதம் | | | 42,500 | 64,100 |
| 18 | **குப்தா**<br>200 பொருளாதாரம் புத்தகங்கள், ஒன்று ₹.95 வீதம் | | | | 19,000 |
| | **விற்பனை க/கு வ** | | | | 83,100 |





43. அ)

**பாபு ஏடுகளில் 31. 3. 2016 ஆம் நாளன்றைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | கை ரொக்கம் | | 7,000 | |
| 2 | பற்பல கடனாளிகள் | | 5,400 | |
| 3 | சம்பளம் | | 6,800 | |
| 4 | வாராக்கடன் | | 200 | |
| 5 | தொடக்கச் சரக்கிருப்பு | | 15,400 | |
| 6 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 7,000 | |
| 7 | பற்பல கடனீந்தோர் | | | 11,800 |
| 8 | முதல் | | | 25,000 |
| 9 | கொள்முதல் | | 45,000 | |
| 10 | விற்பனை | | | 50,000 |
| | மொத்தம் | | 86,800 | 86,800 |

( அல்லது )

43. ஆ

**2020, டிசம்பர் 31- ஆம் நாளுக்குரிய**

**வங்கி சரிகட்டும் பட்டியல்**

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 15,000 |
| **கூட்டுக:** | | |
| விடுத்த காசோலை, முன்னிலைப்படுத்தப்படாதது | 1,500 | |
| பங்காதாயம் பெற்றது | 200 | 1,700 |
| | | 16,700 |
| **கழிக்க:** | | |
| செலுத்திய காசோலை வரவு வைக்கப்படாதது | 1,000 | |
| வங்கியால் செலுத்தப்பட்ட வாடகை | 1,000 | |
| பெட்டக வாடகை பதியப்படாதது | 1,200 | 3,200 |
| **வங்கி அறிக்கையின் படி இருப்பு** | | 13,500 |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

44. அ) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| வ. எ ண் | அடிப்படை | ரொக்கத் தள்ளுபடி | வியாபார தள்ளுபடி |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | பொருளை வாங்கியவர் தொகையை முன்கூட்டி செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. | வாங்குபவர் அதிகப்படியான எண்ணிக்கையில், பொருட்களை வாங்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது |
| 2 | வழங்கப்படும் காலம் | ரொக்கத் தள்ளுபடி, விற்றவர் அல்லது கடனீந்தோரால் வாங்கியவர் அல்லது கடனாளிக்கு தொகையைத் திரும்ப செலுத்தும்போது வழங்கப்படுகிறது | வியாபாரத் தள்ளுபடி, விற்றவரால் வாங்கியவருக்கு பொருட்களை விற்கும்போது வழங்கப்படுகிறது. |
| 3 | தள்ளுபடி தொகை | இத் தள்ளுபடி திரும்ப செலுத்தும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. | இத் தள்ளுபடி பொருட்கள் வாங்கிய அளவினை அடிப்படையாகக் கொண்டது. |
| 4 | கணக்கேடுளில் பதிவு செய்தல் | இது, கணக்கேடுகளில் பதியப்படுகிறது | இது, கணக்கேடுகளில் பதியப்படுவது இல்லை |
| 5 | இடாப்பிலிருந்து கழித்து காட்டுதல் | இது, இடாப்பிலிருந்து கழித்துக் காட்டப்பட மாட்டாது. | இது, இடாப்பிலிருந்து கழித்து காட்டப்படும். |

( அல்லது )

44. ஆ) **சுந்தரம் என்பவரின் ஏடுகளில் முப்பத்தி ரொக்க ஏடு**

| நாள் | பெறுதல்கள் | இ.எ | பே.ப.எ | தொகை ₹ தள்ளுபடி | தொகை ₹ ரொக்கம் | தொகை ₹ வங்கி | நாள் | செலுத்தல்கள் | சா.சீ.எ | பே.ப.எ | தொகை ₹ தள்ளுபடி | தொகை ₹ ரொக்கம் | தொகை ₹ வங்கி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2020 ஜன 1 | இருப்பு கீ/கொ | | | | 42,500 | 35,000 | 2020 ஜன 4 | வங்கி க/கு | | எ | | 11,500 | |
| 3 | விற்பனை க/கு | | | | 15,700 | | 21 | மகேஷ் க/கு | | | 300 | 19,700 | |
| 4 | ரொக்க க/கு | | எ | | | 11,500 | | | | | | | |
| 19 | பங்காதாயம் பெற்றது | | | | | 2,000 | | | | | | | |
| | | | | | | | 31 | இருப்பு கீ/இ | | | | 27,000 | 48,500 |
| | | | | | 58,200 | 48,500 | | | | | 300 | 58,200 | 48,500 |
| பிப் 1 | இருப்பு கீ/கொ | | | | 27,000 | 48,500 | | | | | | | |





45. அ)

**திருத்தியப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 1 | அனாமத்து க/கு ப<br>விற்பனை க/கு<br>( விற்பனை ஏட்டின் கூட்டுத் தொகையில் ₹. 2,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளதை திருத்தியது ) | | 2,000 | 2,000 |
| 2 | இயந்திரம் க/கு ப<br>கொள்முதல் க/கு<br>(இயந்திரம் வாங்கியது தவறாக கொள்முதல் ஏட்டில் பதிவு செய்யப்பட்டதை திருத்தியது ) | | 3,000 | 3,000 |
| 3 | அனாமத்து க/கு ப<br>மதி க/கு<br>( மதி கணக்கில் கூடுதலாக பற்று வைக்கப்பட்டதை திருத்தியது ) | | 90 | 90 |
| 4 | கொள்முதல் திருப்ப க/கு ப<br>அனாமத்து க/கு<br>( கொள்முதல் திருப்ப ஏட்டில் அதிகமாக காட்டப்பட்ட தொகையை திருத்தியது ) | | 200 | 200 |
| 5 | விற்பனை க/கு ப<br>அனாமத்து க/கு<br>( விற்பனை ஏட்டின் கூட்டுத் தொகை அதிகமாக எடுத்து எழுதியதை திருத்தியது ) | | 100 | 100 |

( அல்லது )



www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**45. ஆ**

**விற்ற இயந்திரம் மீதான இலாபம் அல்லத்து நட்டம் கணக்கிடுதல்**

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| இயந்திரத்தின் அடக்க விலை | 4,50,000 |
| கூட்டுக : நிறுவுதல் செலவு | 50,000 |
| | 5,00,000 |
| கழிக்க : தேய்மானம் 2010 -2011 ( 5,00,000 × 15/100 ) | 75,000 |
| | 4,25,000 |
| கழிக்க : தேய்மானம் 2011 -2012 | 75,000 |
| | 3,50,000 |
| கழிக்க : தேய்மானம் 2011 -2012 | 75,000 |
| | 2,75,000 |
| கழிக்க: விற்ற விலை | 3,85,000 |
| விற்றதில் இலாபம் | 1,10,000 |

**46. அ**

**ராமசுந்தரி ஏடுகளில் 2019, டிசம்பர் 31 ஆம் ஆண்டிற்கான**

ப **வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 2,500 | விற்பனை | | 7,000 |
| கொள்முதல் | | 3,300 | இறுதி சரக்கிருப்பு | | 4,000 |
| கூலி | | 2,700 | | | |
| மொத்த இலாபம் கீ/இ | | 2,500 | | | |
| | | 11,000 | | | 11,000 |
| சம்பளம் | | 2,600 | மொத்த இலாபம் கீ/கொ | | 2,500 |
| நிகர இலாபம் | | 2,400 | பெற்ற தள்ளுபடி | | 2,500 |
| | | 5,000 | | | 5,000 |



**ராமசுந்தரி ஏடுகளில் 31, டிசம்பர் 2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| முதல் | 52,000 | | இயந்திரம் | | 52,000 |
| கூட்டுக :நிகர இலாபம் | 2,400 | 54,400 | வங்கி ரொக்கம் | | 6,400 |
| கடனீந்தோர் | | 8,000 | இறுதிச் சரக்கிருப்பு | | 4,000 |
| | | 62,400 | | | 62,400 |

( அல்லது )

**46. ஆ**

ப **சென்னின் ஏடுகளிலிருந்து 31, மார்ச் 2016ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 10,000 | விற்பனை | 3,00,000 | |
| கொள்முதல் | 1,60,000 | | கழிக்க : உள் திருப்பம் | 16,000 | 2,84,000 |
| கழிக்க : வெளித் திருப்பம் | 10,000 | 1,50,000 | | | |
| கூலி | 30,000 | | இறுதி சரக்கிருப்பு | | 20,000 |
| கூட்டுக : கொடுபடவேண்டிய கூலி | 4,000 | 34,000 | | | |
| உள்தூக்கு கூலி | | 10,000 | | | |
| உள் ஏற்றிச்செல் செலவு | | 8,000 | | | |
| எரிவாயு மற்றும் எரிசக்தி | 8,000 | | | | |
| கழிக்க : முன்கூட்டி செலுத்தியது | 1,000 | 7,000 | | | |
| மொத்த இலாபம் கீ/இ | | 85,000 | | | |
| | | 3,04,000 | | | 3,04,000 |



www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

47. அ) நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக.

i) ஏடுகளைப் பராமரிப்பவர் ( செப் 2020 , மே 2022)

- நிதிச் சார்ந்த நடவடிக்கைகளை முறையாக பதிவு செய்து ஏடுகளைப் பராமரிக்கிறார்.
- நிதிநிலை அறிக்கைகளையும் பிற நிதி அறிக்கைகளையும் தயாரிக்கிறார்.

ii) நிர்வாகத்திற்குத் தகவல்களைத் தருபவர்

- முடிவுகளை எடுக்கவும் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கவும், நிர்வாகத்திற்குத் தேவையான நிதிச் சார்ந்த தகவல்களை அளித்து உதவுகிறார்.

iii) வணிகச் சொத்துக்களின் காப்பாளர்

- சொத்துக்களுக்கான பதிவேடுகளைப் பராமரிப்பதன் மூலம், நிர்வாகம் அந்தச் சொத்துக்களைப் பாதுகாத்து கட்டுப்படுத்த முடிகிறது.
- சொத்துக்களுக்கான காப்பீடு மற்றும் சொத்துகள் பராமரிப்பைப் பற்றிய ஆலோசனையை நிர்வாகத்திற்கு வழங்குகிறார்.

iv) நிதி ஆலோசகர்

- நிதிச் சார்ந்த தகவல்களை பகுப்பாய்வு செய்து , முதலீட்டுக்கான வாய்ப்புகள், செலவைக் குறைப்பதற்கான உத்திகள், எதிர்கால வளர்ச்சி மற்றும் விரிவு படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து ,வணிக மேலாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

v) வரி மேலாளர்

- குறித்த காலத்தில் வருமானவரி விவரம் தயாரிப்பு செய்தல், மற்றும் வருமானவரி செலுத்துதல் முதலியவற்றை உறுதி செய்கிறார்.
- வரி மேலாண்மை, வரிச் சுமையை குறைத்தல், வரிவிலக்கு பெறுதல் போன்றவற்றில் மேலாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

vi) பொது தொடர்பு அலுவலர்

- தேவைப்படும் பயனீட்டாளர்களுக்கு, கணக்கியல் பகுப்பாய்வு செய்யத் தேவைப்படும் விவரங்களை வழங்குகிறார்.

( அல்லது )

47. ஆ)

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) நிலைச் சொத்து வாங்குவதற்காக இயக்குனரின் வெளிநாட்டு பயணத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை ₹. 10,000. | முதலினச் செலவு |
| (ii) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை | வருவாயின வரவு |
| (iii) புதிய கட்டடம் கட்டுவதற்காக பழைய கட்டடத்தை இடிப்பதற்கு மேற்கொண்ட செலவு | முதலினச் செலவு |
| (iv) தீயினால் இயந்திரத்தில் ஏற்பட்ட பாதிப்பிற்காக பெறப்பட்ட காப்பீட்டு உரிமைத் தொகை | முதலினச் வருவாய் |
| (v) வாகனத்தில் எரிபொருள் திறனை அதிகரிக்க அதன் இயந்திரத்தை புதுப்பிக்க மேற்கொண்ட செலவு ₹. 25,000 | முதலினச் செலவு |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net